# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 6 ஹிஜ்ரி 1429 சஃபர் பிப்ரவரி 2009

இலவசம்


# ஒன்றிணைந்து வளம் பெறுவோம்



# சமுதாய வளர்ச்சி மற்றும் கல்வி மேம்பாடு விழிப்புணர்வு உரையரங்கம்

ஒற்றுமையும் ஒருங்கிணைப்புமே சிறப்பான எதிர்காலத்துக்கு வழி. சிங்கப்பூரில் இயங்கும் இந்திய முஸ்லிம் அமைப்புகள் அனைத்தும் ஒற்றுமையுடனும் ஒருங்கிணைப்புடனும் செயலாற்ற வேண்டும். எதிர்காலச் சவால்களைச் சமாளிக்க அதுவே சிறந்த வழி.



முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் வழங்கிய யோசனை இது. ஜாமியா சிங்கப்பூர் அமைப்பும் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சங்கங்களும், பள்ளிவாசல்களும் இணைந்து ஏற்பாடு செய்த சமுதாய வளர்ச்சி மற்றும் கல்வி மேம்பாடு விழிப்புணர்வு உரையரங்கத் தொடரைத் துவக்கி வைத்துப் பேசிய சுற்றுப்புற, நீர்வள அமைச்சருமான அவர், பல அரிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

சுல்தான் பள்ளிவாசல் நிகழ்ச்சி அரங்கில் 18 ஜனவரி 2009 (21 முஹர்ரம்1430) பிற்பகலில் விரிவுரை சிறப்பாகத் தொடங்கியது.

முஸ்லிம் சமூகத் தலைவர்கள், பல்வேறு சங்கங்களின் உறுப்பினர்கள் உள்ளிட்ட 500க்கு மேற்பட்டோர் நிகழ்ச்சிக்கு வருகையளித்திருந்தனர். நிகழ்ச்சியின் தொடக்கமாக, முஹம்மது ஜலீசுத்தீன் திருக்குர்ஆன் வசனங்களை ஓதியதை அடுத்து, **O.H.** அப்துல் மஜீது இஸ்லாமியப் பாடல்களை இசைத்தார்.

ஜாமியா கிண்டர்கார்டன் பள்ளிச் சிறார்கள். பென்கூலன் பள்ளிவாசல் வார இறுதி கல்வி நிலைய மாணவர்கள், தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்க இளையர் குழுவினர் ஆகியோரின் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## கூட்டுச் செயல் திட்டங்கள்

கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் ஹாஜி நசீர் கனி, இந்த நிகழ்ச்சி ஜாமியாவின் நீண்டகால சமுதாய நற்பணிகளில் மற்றொரு சிறப்பு அத்தியாயம் என தமது வரவேற்புரையில் கூறினார். முஸ்லிம்கள் மற்றும் சிங்கப்பூரர்களின் மேம்பாட்டுக்காக பொதுவான பல்வேறு கூட்டுச் செயல் திட்டங்களை மற்ற அமைப்புகளுடன் இணைந்து ஜாமியா சிங்கப்பூர் மேற்கொண்டு வருவதை அவர் சுட்டிக் காட்டினார்.

ஹாஜி அபூபக்கர் மைதீன் சில தமிழ்ச் சொற்களுடன் தொடங்கி வரவேற்புரை ஆற்றினார். கடந்த காலத்தில் முன்னோடி முஸ்லிம் பெரியார்கள் பலர் சிங்கப்பூரில் ஆற்றிய அரும்பணிகளை அவர் நினைவு கூர்ந்தார். முஸ்லிம்களான நாம் அண்ணல் நபிகளார் வழியில் முன்னுதாரணமான அறப் பணிகளை சமுதாய நலனுக்காகச் செய்துவர



வேண்டும். அது நமது தார்மீகக் கடமை என ஜாமியா தலைவர் வலியுறுத்தினார்.

நம் முன்னோர்கள் தன்னலம் கருதாமல் ஆற்றிய தியாகப் பணிகள் சமுதாயத்திற்கு நற்பலனை அளித்துள்ளன. அவர்கள் காட்டிய வழியில், நாமும் சமுதாய மேம்பாட்டுக்காக ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று அவர் எடுத்துரைத்தார்.

## இந்திய முஸ்லிம்களின் பங்கு

இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் ஹாஜி ஹாஜா பஹ்ருதீன், சிறப்பு விருந்தினர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அவர்களுக்கு ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் பொன்னாடையும் மாலையும் அணிவித்துச் சிறப்பித்தார்.

ஹாஜி அபூபக்கர் மைதீன் அவர்களின் தொலைநோக்குடைய நீண்டகாலப் பணிகளை அமைச்சர் தமது உரையில் பட்டியலிட்டார். கல்வி அறக் கட்டளை நிதியத்தின் (ETF) முதல் தலைவராக விளங்கிய முன்னோடி அவர். ஜாமியாவின் வளங்களையும் நிபுணத்துவத் திறன்களையும் மற்ற சங்கங்கள், சமூக அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளும் அவருடைய திட்டம் தூரநோக்குடையது, ஒட்டு மொத்த சமுதாயத்திற்கும் பயன்தரக் கூடியது என அமைச்சர் தெரிவித்தார்.

கடின உழைப்பு, விடாமுயற்சி, சமூகப் பொறுப்புணர்ச்சி ஆகியவை சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களிடம் காணப்படும் பொதுப் பண்புகள். இவற்றைப் கொண்டு அவர்கள் வெற்றிகரமான வர்த்தகர்களாகவும், தொழில் நிபுணர்களாகவும் திகழ்கின்றனர். மேலும், சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் முக்கிய உறுப்பினர்களாகவும் அவர்கள் விளங்குகின்றனர். சிங்கப்பூர் முஸ்லிம்களில் 17 விழுக்காட்டினர் இந்திய முஸ்லிம்கள் என்றாலும் அவர்கள் சமூகத்துக்கு ஆற்றிவரும் பங்கு கடந்த இரு நூற்றாண்டுகளாக பன்மடங்கு அதிகரித்துள்ளது என்று அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் தமது உரையில் குறிப்பிட்டார்.

குடியரசிலுள்ள இந்திய முஸ்லிம் சங்கங்கள் ஜாமியா சிங்கப்பூர் அமைப்புடன் அணுக்கமாக இணைந்து சமூக வளர்ச்சி மற்றும் இஸ்லாமிய நற்பணிகளைத் தொடர வேண்டும் என்பதே இந்த நிகழ்ச்சியின் இலக்கு. ஜாமியா சிங்கப்பூர் கடந்த எழுபது ஆண்டுகளாக கல்வி, சமூக வளர்ச்சி, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பல மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## புரிந்துணர்வு - இணக்கக் - குறிப்பு

அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் முன்னிலையில் ஹாஜி அபூபக்கர் மைதீன், ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல் ஆகியோர் உடனிருக்க, ஜாமியா சிங்கப்பூர் அமைப்பும், சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சங்கங்களும் ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு குறித்த புரிந்துணர்வு - இணக்கக் - குறிப்பில் கையெழுத்திட்டன.

## அங்கீகார விருதுகள்

இந்நிகழ்ச்சியின் ஒரு சிறப்பு அங்கமாக 27 பேருக்கு சமூக சேவை அங்கீகார விருதுகள் வழங்கப்பட்டன. சமுதாய நற்பணி, வர்த்தகம், கல்வி மாதர் நலம் மற்றும் இளையர் தொண்டு ஆகியவற்றுக்குப் பாடுபட்டு வரும் அவர்களுக்கு ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் அமைச்சர் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமூக. தொழிற் சங்கத் தலைவருமான ஹாஜி எம்.கே. அப்துல் ஜப்பார், முன்னணி தொழில் முனைவரும் புரவலருமான ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல், தொழிலதிபர் ஹாஜி முஸ்தாக் அஹமது, ஹாஜி இப்ராஹிம் மரைக்கான், ஹாஜி ஏ.ஜி. முஹம்மது முஸ்தபா, ஹாஜி பி.ஏ. பக்கீர் மைதீன், ஹாஜி கே.ஓ. ஷேக் அலாவுதீன், திருமதி மரியம் பீவி, திருமதி ஹைரூன் மஸ்தான் ஆகியோர் விருது பெற்றோர் அணியில் அடங்குவர்.

சமுதாய வளர்ச்சி மற்றும் கல்வி மேம்பாடு விழிப்புணர்வு உரையரங்கத் தொடரின் வரைபடச் சின்னத்தையும் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் திறந்து வைத்தார் அஸர் தொழுகைக்குப் பிந்திய தேனீர் உபசரிப்பை அடுத்து, சொற்பொழிவுகள் இடம்பெற்றன. டாக்டர் சையது இப்ராஹிம், மௌலவி ஹாபிஸ் எஸ்.எ. ரஃபீக் அஹமது ஃபாசில் பாகவி, மௌலவி ஹாபிஸ் அப்துல் கய்யூம் பாகவி ஆகியோர் உரையாற்றினர்.

ஜாமியா சிங்கப்பூர் இமாம் மௌலவி யூசுப் யாகூப் வாடியா அவர்களின் துவாவுடன் மாலை மணி 7.15க்கு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



## புரிந்துணர்வு இணக்கக் குறிப்பில் கையெழுத்திட்ட அமைப்புகள்:

ஹாஜி அப்துல் கரீம் மைதீன், துணைத் தலைவர்-1, ஜாமியா சிங்கப்பூர்
ஹாஜி ஹாஜா பஹ்ருதீன், தலைவர், இந்திய முஸ்லிம் பேரவை (பெடரேஷன்)
ஹாஜி நசீர் கனி, தலைவர், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்
ஹாஜி T.M. ஷேக் முஹிதீன், தலைவர், சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம்
ஜனாப் O.P.M.N. கமால், தலைவர், சிங்கப்பூர் தக்கலை முஸ்லிம் சங்கம்
ஹாஜி உஸ்மான் ஒலி முகம்மது, செயலாளர், திருவிதாங்கோடு முஸ்லிம் சங்கம்
ஜனாப் ஃபரிஹுல்லாஹ், தலைவர், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம்
ஜனாப் சையது ஜஹாங்கீர், தலைவர், மணி சேஞ்சர் சங்கம், (சிங்கப்பூர்)
ஜனாப் ஷாகுல் ஹமீது சையது யூசுப் ஷா, செயலாளர், தோப்புத்துறை முஸ்லிம் சங்கம்
ஹாஜி E.S. இப்ராஹிம் மரைக்கான், தலைவர், தென் இந்திய ஜமியத்துல் உலமா
ஹாஜி P.M.A. முஹம்மது ஹஸன், தலைவர், காயல்பட்டினம் நலனபிவிருத்தி சங்கம்
ஹாஜி அப்துல் கரீம், துணைத் தலைவர், கூத்தாநல்லூர் சங்கம்
ஹாஜி M.Y. முஹம்மது ரஃபீக், செயலாளர், பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகக் குழு
ஜனாப் ஷெய்க் ஃபக்ருதீன், தலைவர், மஸ்ஜித் ஜாமியா சூலியா நிர்வாகக் குழு



# எழுத்தாளர் ஜே.எம். சாலிக்கு சீறா விருது

சென்னை கம்பன் கழகம் நாடி தமிழ்ப் பதிப்பு ஆசிரியர் குழு உறுப்பினர் - எழுத்தாளர் ஜே.எம்.சாலிக்கு சீறா விருது வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. சென்னையில் 8.8.2008 அன்று தொடங்கிய விழாவில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ராம சுப்பிரமணியம் கழகத்தின் சார்பில் அந்த விருதை வழங்கினார்.

முன்னாள் தலைமை நீதிபதி மு.மு. இஸ்மாயில் 34 ஆண்டுகளுக்கு முன் நிறுவிய சென்னை கம்பன் கழகம் பல விருதுகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. சீறாப்புராண விருது அவற்றில் ஒன்று. கீழக்கரையைச் சேர்ந்த புரவலர் இத்ரீஸ் மரைக்காயரின் ஆதரவில் தொடங்கப்பட்ட விருது இது. கம்பன் கழகத் துணைச் செயலாளர் முனைவர் சாரதா நம்பியாரூரான் விருதாளர் அறிமுக உரையில் குறிப்பிட்டவை:

"ஜே.எம்.சாலி தமது 15ஆவது வயதிலேயே எழுதத் தொடங்கிவிட்டார். இவர் பொழுது போக்கிற்கான இலக்கியம் படைக்காமல், சமுகச் சீர்திருத்தக் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான கதைக் களங்களைத் தேர்வு செய்து எழுதிவருபவர். தமிழில் இசுலாமிய சமூகத்தின் வாழ்புலம், பண்பாடு, வழக்காறுகள்-உரிய முறையில், கருத்துத் தெளிவுடன் இலக்கியக் கலையாக்கமாக வெளிப்படும் மரபின் தொடக்கமாக சாலி இருந்திருக்கிறார் என்றால் மிகையல்ல.

இவரது 'இரு கண்கள்' புதினம், 'கண்ணன்' சிறுவர் இதழின் பரிசை வென்றது. தமிழக அரசின் சிறந்த புதினத்திற்கான பரிசை இவரது 'கனாக் கண்டேன் தோழி' பெற்றது. 'அறிவியல் முன்னோடிகள்' என்ற நூல் தமிழக அரசின் பரிசை வென்றது. இவரது சிறுகதைகள் ஆங்கிலம், இந்தி,



உருது, சிங்கள மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சிங்கப்பூர், சென்னைப் பல்கலைக் கழகங்கள். புதுக் கல்லூரி. இராணி மேரிக் கல்லூரிப் பாடத் திட்டங்களில் இவருடைய சிறுகதைகள், புதினங்கள் இடம் பெற்றுள்ளன. எம்.ஃபில், முனைவர் பட்டம் பெறுவோருக்கு ஆய்வுக்குரியவையாகவும் இவரது படைப்புகள் பெருமை பெற்றுள்ளன!

சிங்கப்பூர் 'தமிழ் முரசு' நாளிதழின் துணையாசிரியர், 'ஆனந்த விகடன்' துணையாசிரியர், சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகத்தின் செய்தி ஆசிரியர், சிங்கப்பூர் தொலைக்காட்சிக் கழகத்தில் பொறுப்பு என ஊடக உலகில் ஒப்பற்றுத் திகழ்ந்தவர். ஓய்வு பெற்ற பிறகு, சிங்கப்பூர் வானொலியின் பகுதிநேர செய்தியாசிரியராகப் பணியாற்றி, தற்போது மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இவர். தம்முடைய தரமான தமிழ்ப் பணிக்காகத் 'தமிழவேள் விருது' (சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம்), கணையாழி விருது (கவிமாலை அமைப்பு) போன்ற பரிசுகளும் விருதுகளும் பெற்ற பெருமையாளர். இவருடைய பன்முகத் தமிழ்ப் பணியைப் பாராட்டி சென்னைக் கம்பன் கழகம் 'சீறா விருது' வழங்கிச் சிறப்பிக்கின்றது."



மஸ்ஜித் அல் அப்ரார் பள்ளிவாசலின் இமாமாக நாலரை ஆண்டு பணியாற்றிய மவ்லவி சாதிக் பாதுஷா ஃபைசிக்கு பள்ளிவாசல் நிர்வாகம் 29-9-2008அன்று பாராட்டு உபசரிப்பு வழங்கியது. அவர் 2-10-2008 இந்தியாவுக்கு புறப்பட்டார். சாதிக் பாதுஷா ஃபைசி தமது பணிக் காலத்தில் வாராந்திர மதரஸா வகுப்புகள், புர்தா ஷரீப் ஓதும் அரங்கு உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். அவர் ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியவை என பள்ளிவாசல் நிர்வாகிகள் நாடியிடம் கூறினர்.

# MUIS PHOTO NEWS முயிஸ் படச் செய்திகள்



Minister's visit to First aL.I.V.E. centre of excellence at Al-Istighfar Mosque on 14 Sept 2008




Singapore Hajj Mission officiating ceremony at Assyafaah Mosque on 18 Oct 2008




Asatizah seminar at Orchid Country Club on 18 Oct 2008



Charity sales at Taman Warisan on 20 Sept 2008



39th Mosque Council meeting at Hasanah Mosque on 25 Oct 2008




MUIS conference 2008 at Hyatt Hotel on 1 & 2 Nov 2008




MUIS's Diploma in Education graduation ceremony at Park Hotel on 5 Aug 2008



MUIS lecture by Dr Ahmad Syafii at The Grassroots Club on 24 Oct 2008

# MUIS PHOTO NEWS முயிஸ் படச் செய்திகள்



MUIS mosque excellence service day at The Republic Polytechnic on 30 Oct 2008



MUIS pre-Hajj departure briefing 1429H at The Singapore Expo on 1 Nov 2008



Sheikh Abdul Fatah Al Bizem visit to Madrasah Aljunied on 16 Oct 2008



Singapore Hajj Mission logistical preparation on 25 Oct 2008



Visit by Crown Prince of Perlis to Harmony Centre on 6 Nov 2008



Visit to MUIS by Shaykh Habib Salim bin Abdullah bin Umar As Shatiri on 24 Oct 2008




Workshop on Introduction to Islamic Thought & Orientation at Civil Service College on 18 Oct 2008



Workshop on Intellectual Transformation of Muslim Acitivism by Dr Ahmad Syafii Maarif at An Nahdh

# வசதி குறைந்தோருக்கு உதவிக் கரம் நீட்ட வேண்டும்

நோன்புப் பெருநாள் ஈகைத் திருநாள். வசதி குறைந்தோருக்கு உதவிக் கரம் நீட்ட வேண்டும். சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம் அமைப்புகள் அந்த நற்பணியைச் செய்துள்ளன.

## கடையநல்லூர் முஸ்லிம் லீக்

கடையநல்லூர் முஸ்லிம் லீக் சிண்டாவின் உதவித் திட்டத்துடன் (Project GIVE) இணைந்து, வசதி குறைந்த 192 குடும்பங்களுக்கு நோன்புப் பெருநாள் அன்பளிப்பு வழங்கியது.

சங்கத்தின் நிர்வாகிகளும் தொண்டர்களும் வீடுகளுக்கு நேரில் சென்று அன்பளிப்புக் கூடைகளை அளித்தனர்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 70 வெள்ளி மதிப்புள்ள பொருட்களும் 30 வெள்ளி என்.டி.யூ.சி. பற்றுச் சீட்டுகளும் வழங்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் ஹாஜி அ.மு. நசீர் கனி கூறினார். ஈகையின் மாண்பை அறிந்துணர ஓர் அரிய வாய்ப்பை இந்த உதவித்திட்டம் தந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முப்பது தொண்டர்களுடன் சிங்கப்பூரின் பல பகுதிகளுக்கும் சென்று வசதி குறைந்த குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசி உதவிப் பொருட்களை ஒப்படைத்தோம். அவர்களின் மகிழ்ச்சி எங்களுக்கு அளவற்ற மனநிறைவை அளித்தது என்று கடையநல்லூர் முஸ்லிம் லீகின் செயலாளர் மு.அ. மசூது தெரிவித்தார்.



மூன்று நாள் அந்தப் பணியில் முனைப்பாக ஈடுபட்டோம். இந்த நற்பணி தொடரும் என்று அவர் கூறினார்.

சங்கத் தொண்டூழியர்கள் வீடு தேடி வந்து நோன்புப் பெருநாள் அன்பளிப்பை வினியோகித்துச் சென்றது மறக்க முடியாத நிகழ்ச்சி என உதவி பெற்ற குடும்பத்தினர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம்

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் (உய்மா) நோன்புப் பெருநாளை முன்னிட்டு உதவிப் பணியுடன் ஒன்றுகூடல் நிகழ்ச்சியையும் நடத்தியது.

வசதி குறைந்த 20 குடும்பங்களுக்கு ஈகைத் திருநாள் அன்பளிப்பை உய்மா வழங்கியது. முயிஸ், சிண்டா ஆகியவற்றின் ஆதரவுடன் அன்பளிப்புப் பொருட்களையும் பற்றுச் சீட்டுகளையும் வீடுதேடி சென்று கொடுத்ததாக சங்கத் தலைவர் ஃபரிஹுல்லா தெரிவித்தார்.

சில ஆண்டுகளுக்கு முன் ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் இப்பணியைத் தொடங்கியது. 2006ஆம் ஆண்டில் வசதி குறைந்த 10 முஸ்லிம் குடும்பங்களுக்கு உதவிய உய்மா, கடந்த ஆண்டு 21 குடும்பங்களுக்கு பெருநாள் அன்பளிப்பு வழங்கியது.

உதவித் திட்டத்திற்கு சிண்டா 21 உணவுப்பொருள் கூடைகளையும், 30 வெள்ளிக்குரிய பற்றுச்சீட்டுகளையும் கொடுத்தது. பெருநாளுக்கு முன், உரிய நேரத்தில் வசதி குறைந்த குடும்பங்களுக்கு அவற்றை ஒப்படைத்தோம். அதன் மூலம் அவர்களின் பெருநாள் மகிழ்ச்சியை

அதிகப்படுத்த முடிந்தது என்று உய்மாவின் பொதுச் செயலாளரும், அதன் குடும்ப பராமரிப்புத் திட்ட நிருவாகியுமான ஹாஜா மைதீன் தெரிவித்தார். இந்த உதவிப் பணியை விரிவுபடுத்த விரும்புவதாக சங்கத் தலைவர் ஃபரிஹுல்லா கூறினார்.



## பெருநாள் சந்திப்பு

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்க நிர்வாகிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஹாஜி எம்.கே. அப்துல் ஜப்பார் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து பெருநாள் நல்வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தொழிற்சங்கத் தலைவருமான எம்.கே.ஏ. ஜப்பார் அவர்கள் உய்மாவின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர். இச்சந்திப்பு சிறந்த பெருநாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியாக அமைந்தது என உய்மா நிர்வாகிகள் கூறினர்.




## பட்டமளிப்பு

உய்மா குடும்ப ஆலோசனை சேவையையும் வழங்கி வருகிறது. அதன் உறுப்பினர் நாகூர் மைதீன் பின் மஸ்தான் ஆலோசனை சேவைத் துறை டிப்ளமா வகுப்பில் பயின்று 27-9-2008 அன்று லீ சமூகக் கல்லூரியின் பட்டச் சான்றிதழ் பெற்றார். அவர் சிறைச் சாலை அதிகாரியாகப் பணியாற்றியபடி உய்மாவின் இளையர் மற்றும் குடும்ப ஆலோசனைத் திட்டத்திற்கு உதவிவருகிறார். பட்டமளிப்பு விழாவில் சங்கத்தின் பொதுச் செயலாளரும் நிர்வாகிகள் சிலரும் கலந்து கொண்டு நாகூர் மைதீனுக்கு நல்வாழ்த்து கூறினர்.



*நிதி அமைச்சர் திரு. தர்மன் சண்முகரத்தனம் மஸ்ஜித் மௌலானா முஹம்மது அலி பள்ளிவாசல் நிர்வாகிகள், இமாம் அவர்களுடன் நோன்பு திறக்கும் நிகழ்வில் பங்கேற்றார்.*

# இதழியல் தேனீ இ.என்.எம். முஹ்யிதீன்

“சிங்கப்பூர் தமிழ்முரசின் முன்னாள் ஆசிரியர் ஜனாப் இ.என்.எம். முஹ்யிதீன் அவர்களின் உயிர் வாழும் உண்மைகள் எனும் இந்நூலினைப் படித்து மகிழ்ந்தேன்....எளிய இனிய தமிழ் நடையும், கருத்துத் தெளிவும் இந்நூலுக்கு அணி செய்கின்றன. திக்குத் தெரியாமல் திகைப்பவர்களுக்கு இது நல்லதொரு வழிகாட்டி. உலக வாழ்வில் மயங்கி இருப்பவர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு” - பேராசிரியர் சி.நயினார் முகமது வழங்கியுள்ள அணிந்துரையில் இடம் பெற்றுள்ள வாசகங்கள் இவை.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் பழனி அரங்கசாமி, விரிவான ஆய்வுரையும், கோலாலம்பூர் டான்ஸ்ரீ ஹாஜி S.O.K உபைதுல்லா வாழ்த்துரையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். ‘இந்நூலைப் படிக்கும்போது என் போக்கில் ஒரு அபார மாறுதலைக் கண்டேன். சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடிய சான்றுகளுடன் பல தத்துவங்களை ஆசிரியர் விளக்கியிருக்கிறார்...’ என எழுதியுள்ளார் ஹாஜி உபைதுல்லா. இரு பதிப்புகளைக் கண்ட *244* பக்க நூல் உயிர் வாழும் உண்மைகள் - ஹஸ்ரத் ஜீலானியின் வாழ்வும், வாக்கும்.

நூலாசிரியர் இ.என்.எம். முஹ்யிதீன் மூத்த பத்திரிகையாளர். தேனீ என்ற புனைபெயரில் கவிதை, கட்டுரை. நூல்களை எழுதி வந்த அவர், தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களின் தமிழ் முரசு நாளிதழின் ஆசிரியர் குழுவில் *31* ஆண்டுகள் பணியாற்றியவர்.

## பொறுப்பாசிரியர்

தமிழ் முரசில் இடம்பெறுவதற்கு முன்னரே சில இதழ்களில் ஆசிரியராகச் சேவையாற்றி அனுபவம் பெற்றார் முஹ்யிதீன். தமிழ் நாட்டில் அன்றைய தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடி அருகிலுள்ள ஆயப்பாடி கிராமத்தில் *1928*-ஆம் ஆண்டில் பிறந்த அவர், பள்ளி மாணவராக இருந்தபோதே எழுத்துப் பணியைத் தொடங்கினார். அவருடைய தந்தையார் இ. நெய்னாம் சாகிபு வணிகர். மலேசியாவின் கெடா மாநிலத்தில் நீண்ட காலம் வர்த்தகம் புரிந்த குடும்பத்தைச் சேர்ந்த முஹ்யிதீனுக்கு அதில் ஈடுபாடு இல்லை. *23* வயதில் உதயம் மாத இதழை *(1951)* அவர் தொடங்கினார். அவர் பயின்ற கல்வி அதற்குக் கை கொடுத்தது. பொறையார் நாடார் உயர்நிலைப் பள்ளியிலும், வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியிலும் படித்த அவர் மொழிபெயர்ப்புத் திறனை வளர்த்துக் கொண்டார்.



உதயம் இதழ் தோன்றிய வேகத்தில் மறைந்தது. அதனால் சென்னையில் வெளிவந்த இந்தியத் தூதன் பத்திரிகையின் பொறுப்பாசிரியராகப் பணி புரிந்தார். தமிழ் முரசு இதழின் கோலாலம்பூர் அலுவலகத்தில் சேர்ந்த அவர், பின்னர் சிங்கப்பூருக்கு அழைக்கப்பட்டார். (அப்போது நான் முரசின் துணை ஆசிரியர்.) பெட்டாலிங் ஜெயாவிலிருந்து தமிழ் முரசு மலேசியப் பதிப்பு வெளிவரத் தொடங்கியதால் அவரையும் மற்ற சில துணை ஆசிரியர்களையும் தமிழவேள் கோ.சா அங்கு அனுப்பி வைத்தார்.

சாரங்கபாணி அவர்களின் மறைவுக்குப் பிறகு அவருடைய புதல்வர் ஜெயராமின் தலைமையில் முரசின் பொறுப்பாசிரியராக விளங்கினார் முஹ்யிதீன். கணினியும் இணையமும் இல்லாத காலத்தில் செய்திகள், தலையங்கம். கட்டுரைகளை எழுதிக் குவித்துக்கொண்டிருப்பார் அவர்.

*1995* நடுப்பகுதியில் *66*-ஆம் வயதில் தமிழ் முரசு பணியிலிருந்து ஓய்வு பெற்று தஞ்சாவூர் நகரில் குடியேறினார் முஹ்யிதீன்.

தேனீ எனும் புனைபெயரில் அவர் எழுதிய நூல்கள் பயன்மிக்கவை. வெற்றிகரமான வாழ்க்கைக்கு, நரம்புத் தளர்ச்சி நோயும் நிவர்த்தியும், நெஞ்சில் பதிந்த நினைவுச் சுவடுகள் ஆகிய நூல்களை எழுதிய இலக்கிய, இதழியல் தேனீ இ.என்.எம். முஹ்யிதீன் அண்மையில் 79 வயதில் நினைவுச் சுவடாகிவிட்டார்.

## படைப்புகள்

அவருடைய எழுத்துகளும் நூல் படைப்புகளும் தடம் பதித்தவை. மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுபவை உயிர் வாழும் உண்மைகள் நூல் முன்னுரையின் சில வரிகள்: "முத்திக்கு வித்தாய் விளைந்த விளை பொருளாம், நிலையாய மாயை நிலை குலைய நெறிந்த ஞானப் பெருக்காம் 'கௌதுல் ஆலம்' ஹஸ்ரத் ஷேக் முஹ்யிதீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் திருவினும் திருவாய் அமைந்த வாழ்வையும், பொருளினும் பொருளாய்த் திகழும் வாக்கையும் பற்றிய என் எளிய முயற்சியே இந்நூல் - உயிர் வாழும் உண்மைகள்.

ஹஸ்ரத் ஷேக் ஜீலானி அவர்களின் வாழ்க்கையையும் காலத்தால் அழியா மெய்யுரைகளையும் சுருக்கியும் விரித்தும் விளக்கியும் எழுதியுள்ளேன்" என்று இ.என்.எம். முஹ்யிதீன்" எழுதியுள்ளார். நூலின் முடிவுரையாக இ.என்.எம். முஹ்யிதீன் அவர்கள், தேனீ என்ற புனைபெயரில் எழுதியுள்ள கவிதை சிந்தனைக் கண்ணாடி.

ஞானப் பாட்டையில் பயணம்
செய்யும் வழிப் போக்கனே!
உன் பந்தபாசச் சுமைகளை
இறக்கி வை; நேர்வழியில் செல்
பயணம் இலகுவாகும்

இவ்வுலகம் தற்காலிக தங்கும்
இளைப்பாறும் சத்திரமே - மறந்துவிடாதே!
பயண வழியில் குறுக்கிடும்
மலைமடுக்கள் கடல்களைக்
கண்டு கலங்காதே!
நற்செயல்களே ஆர்ப்பரிக்கும்
அலைகளைக் கடக்க
உதவும் ஆதாரத் தோணிகள்!

.........................................................................................

மந்தைகள் வரும்! போகும்!
மாமனிதர்களின் சுவடுகளோ
மண்ணில் மட்டுமல்ல; மக்கள்
மனதிலும் மறையா முத்திரைகள்

## டாக்டர் கலாம்

உயிர் வாழும் உண்மைகள் நூலையடுத்து முஹ்யிதீன் வழங்கிய நூல் சாதனை நாயகன். இந்தியாவின் முன்னைய அதிபர் அப்துல் கலாமின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நூல் சாதனை நாயகன்.

இரத்தினச் சுருக்கமாக சிறிய வடிவில் அழகிய அட்டைப் படத்துடன் காணக் கிடைக்கும் இந்நூலில் ஒவ்வொரு வாக்கியமும் ஒரு நூறு கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையது. சிந்திப்பவர்களுக்கு இந்நூல் சிறந்த ஊக்க மருந்து. குறிப்பாக மாணவர்களுக்கு விருந்து என சிறப்புரை வழங்கியுள்ளார் எஸ்.பி. முகம்மது ஹுசேன்.

மாணவர்களுக்கு ஓர் எழுச்சி முரசு என்ற வாசகங்களைத் தாங்கிய இந்நூல் ஒரு சிற்றேடு. ஒரு தொகுப்பு. என்று நூல் அறிமுக உரையில் தன்னடக்கத்துடன் முஹ்யிதீன் குறிப்பிட்டுள்ளார். டாக்டர் கலாமின் வாழ்க்கை இளைஞர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் எழுச்சியூட்டுமாறு அமைய வேண்டும் என்னும் நோக்கம் ஊக்கமாகி இச்சிற்றேட்டை உங்கள் கரங்களில் தவழச் செய்திருக்கிறது." என்றும் அவர் கூறுகிறார்.

அதிபர் கலாமின் வாழ்க்கை இன்றைய மாணவ சமுதாயத்துக்கு தரும் பாடங்கள் யாவை என்று 11 பண்புகளை முஹ்யிதீன் பட்டியலிட்டுள்ளார்.

பல எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் தமிழ் முரசின் மூலம் தமது பணிக்காலத்தில் உருவாக்கிய சிறப்பு இ.என்.எம். முஹ்யிதீன் அவர்களுக்கு உண்டு. சிங்கப்பூர் கவிஞர் பாத்தேறல் இளமாறனின் புகழ்ப்பா அவருடைய சாதனைக்கு நற்சான்று:

"வைதவர் தம்மையும் வாழ்த்திடும் உள்ளம்
வாழிய தமிழென வாழ்ந்தவர் என்றும்
பொய்தவழ் போக்கினைப் பொடிப்பவர்ப் புன்மைப்
புரட்டுகள் வெருட்டியே சேர்ப்பவர் நன்மை
மைதவழ் தூவலால் இவர்வரை செய்தி
மனத்தினில் பதியவே வைத்தவர் துய்ய
மொய்தீன் எனுமுயர் மூத்த திருமகன்
மொய்ம்புற வாழ முரசு அறைவனே."

# அல் மதரஸா தாருல் குர்ஆன்

## கல்விப் பணி விரிவாக்கம்

அல் மதரஸா தாருல் குர்ஆன் சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் (SKML) ஊக்குவிப்பினால் கடந்த ஈராயிரமாம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. மாணவர், மாணவியருக்கு மார்க்கக் கல்வியையும் இஸ்லாமிய நெறிகளையும் போதிப்பதே அதன் முக்கிய நோக்கம். ஐந்து மாணவர்களைக் கொண்டு 2000-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மதரஸாவில் 2005-ல் மாணவர் எண்ணிக்கை எழுபதாக உயர்ந்தது. தற்போது தாருல் குர்ஆன் மதரஸாவில் பயில்வோரின் எண்ணிக்கை 170-ஐ எட்டியுள்ளது. ஆறு முதல் 60 வயது வரையுள்ள அவர்கள் வார இறுதியில் நடைபெறும் வகுப்புகளில் கலந்து கொள்கின்றனர். மார்கரெட் டிரைவிலுள்ள குயின்ஸ்டவுன் மஸ்ஜித் ஜாமி செயற்குழு இந்த வகுப்புகளுக்கு நல்லாதரவு வழங்கிவருவதுடன், சமய வகுப்புகளை நடத்துவதற்கும் ஊக்கமூட்டியது. கடையநல்லூர் முஸ்லிம் லீகின் மற்ற மதரஸாக்கள் புக்கிட் பாத்தோக் அர்ராவ்தா பள்ளிவாசல், 2006-ல் தொடங்கப்பட்டது. மஸ்ஜித் முஜாஹிதீன், மஸ்ஜித் அல் அமீன் ஆகியவற்றில் இயங்கி வருகின்றன. திறன்மிக்க மார்க்கக் கல்வி ஆசிரியர்கள் இருநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தற்போது வகுப்பு நடத்திவருகின்றனர்.

### முன்னேற்றப் படிகள்

கடையநல்லூர் முஸ்லிக் லீக் இந்த வகுப்புகளைச் சிறப்பாக நடத்துவதற்கு தென்னிந்தியாவிலிருந்து இரு ஆலிம் கல்வியாளர்களை வரவழைத்துள்ளது. அல்ஹாஜ் மவ்லவி முபாரக் அஹமது மொஹிதீன் ஃபைஜி எம்.ஏ., மவ்லவி ஹாபிஸ் ஹாமீம் உதுமான் ஃபஜி ஆகியோரே அவர்கள். கடந்த மூன்று ஆண்டுக்கு மேலாக சிங்கப்பூரில் கல்வி கற்பித்து வரும் அவர்களின் சேவையை பெற்றோர்களும் மாணவர்களும் வெகுவாகப் பாராட்டுவதாக சங்கம் தெரிவித்தது.

அல் மதரஸா தாருல் குர்ஆன் மேலும் ஒரு முன்னேற்றப் படியாக வார இறுதி வகுப்புகளில் கலந்துகொண்டு மார்க்கக் கல்வியறிவை மேம்படுத்திக் கொள்ளும்படி பெற்றோர் களையும் உற்சாகப் படுத்தி வருகிறது. கல்வி மற்றும் மார்க்க அறிவுத் திறனில் பிள்ளைகள் முன்மாதிரிகளாகத் திகழ்வதற்கு பெற்றோர்கள் வழிநடத்த வேண்டும், வழிகாட்ட முடியும் என்பதே எங்கள் நம்பிக்கை. அந்த முயற்சியில் சில வெற்றிகளைக் கண்டுள்ளோம். பெற்றோர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து குடும்ப ரீதியாகக் கற்பதைக் காணமுடிகிறது. நமது மூத்தோரும் திருக்குர்ஆனையும் அதன் அறிவியல் கூறுகளையும் கற்றறிய அதிக அக்கறை காட்டுவதால், அவர்களுக்கு சிறப்பு வகுப்புகளையும் ஏற்பாடு செய்துள்ளோம். அந்த வகுப்புகளுக்கான பாடத்திட்டத்தில் தேவைக்குரிய பல மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன என உஸ்தாத் அப்துல் மாலிக் கூறுகிறார்.

### தூண்கள், தொண்டூழியர்கள்

கடையநல்லூர் முஸ்லிம் லீகின் ஒரு துணைச் செயற் குழுவான அல் மதரஸா தாருல் குர்ஆன் குழு வார இறுதி வகுப்புகளை தொண்டூழிய உணர்வும் நல்லுள்ளமும் படைத்த பலரின் ஆதரவுடன் நடத்திவருகிறது. நமது சமூகத்தின் இஸ்லாமிய வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்காக வார இறுதி நாட்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் அவர்கள். சகோதரர் அப்துல் லத்தீப், உஸ்தாத் அப்துல் மாலிக், திருமதி நூருன்ஸா, அல்ஹாஜ் அக்பர் மைதீன், சகோதரர் ஷாஹ் ஆகியோர் மதரஸா குழுவின் முக்கிய தூண்கள். தொண்டூழியச் சேவையாளர்களாக நாளுக்கு நாள் மாணவர்கள் அணிதிரண்டு வருவது மகிழ்ச்சிக்குரியது.

குர்ஆன் மற்றும் இக்ரா வகுப்புகள் மட்டுமின்றி இவ்வாண்டு பிக்ஹ், தொழுகை, தஜ்வீத், அன்றாட மனப்பாடம் ஆகியவையும் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. முயிசின் கிட்ஸ் அலைவ் - "kids al.i.v.e." பாடத்திட்டத்தை வரும் ஆண்டுகளில் அறிமுகப்படுத்துவதற்காகத் தொண்டூழியர்களையும், இணைப்பு பணியாளர்களையும் மதரஸா திரட்டி வருகிறது.

இந்திய முஸ்லிம் சமூகத்தை பரவலாகச் சென்றடையும் வகையில் இம் மதரஸா, மஸ்ஜித் முஜாஹிதீன், மஸ்ஜித் அல் அமீன், மஸ்ஜித் ஜாமி ஆகியவற்றுடன் இணைந்து சமய சொற்பொழிவுகளையும் மற்ற நிகழ்ச்சிகளையும் நடத்திவருகிறது.

நல்லாசிரியர்கள் மற்றும் நல்ல மனம் படைத்த தொண்டூழியர்களைக் கொண்டு சிங்கப்பூரின் இதர வட்டாரங்களுக்கும் சேவையாற்ற கடையநல்லூர் முஸ்லிம் லீகும் இம் மதரஸாவும் நம்பிக்கை கொண்டுள்ளன.